குடியுரிமை எண்ணக்கருவின் வரலாற்றுப் பரிணாமமும் நவீன குடியுரிமையும்: ஒரு ஒப்பீட்டாய்வு

# THE HISTORICAL EVOLUTION OF THE CONCEPT OF CITIZENSHIP AND MODERN CITIZENSHIP: A COMPARATIVE STUDY

**M. Abdul Jabbar[1]&T. Fathima Sajeetha[2]**
**Senior Lecturer[1], Asst. Lecturer[2]**
Department of Political Science
South Easrtern University of Sri Lanka
jabbarma2009@gmail.com&sajeethaha@gmail.com

ஆய்வுச் சுருக்கம்
அரசுக்கும் அதன் மக்களுக்கும் இடையிலான உறவு மற்றும் ஆட்சி செய்யும் கோட்பாட்டினைத் தெரிவு செய்தல் என்ற விடயத்தில் குடியுரிமை எண்ணக்கரு முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது அரசின் அங்கத்தவர்களாக யார் யாரை அங்கீகரிப்பது, அத்தகையவர்களின் உறுப்புரிமையை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பன பற்றிய விதிகளை அரசுகள் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். ஒரு சமூகத்தின் தனிமனிதனை சக மனிதர்களுடன் சமூக மற்றும் அரசியல் ரீதியாக இணைத்து வைக்கும் தொடர்புகள்தான் குடியுரிமையின் சாரமாக உள்ளது. இவ்வாய்வானது நவீன குடியுரிமையை குடியுரிமை எண்ணக்கருவின் ஆரம்ப காலகட்டமான கிரேக்க மற்றும் ரோமானியகாலக் குடியுரிமை சிந்தனையுடனும் T.H.மார்ஷலின் சமூகக் குடியுரிமை சிந்தனையுடனும் தொடர்புபடுத்தி ஒப்பிட்டு ஆராய்வதாக உள்ளது. தனிமனிதனை அரசுடனும் ஏனைய சக மனிதர்களுடனும் இணைக்கக்கூடிய இருவழித் தொடர்பை ஆரம்ப காலக் குடியுரிமைகள் கொண்டிருந்ததா? அவற்றிலிருந்து நவீன குடியுரிமை எவ்வாறான விடயங்களை உட்கொண்டுள்ளது? எவ்வாறு வேறுபடுகின்றது? என்பவற்றை உள்ளடக்கியதாக ஆய்வுப் பிரச்சினை காணப்படுகின்றது. இப்பின்னணியினை அடிப்படையாகக் கொண்டு குடியுரிமை என்றால் என்ன? கிரேக்காலக் குடியுரிமை, ரோமானிய காலக் குடியுரிமை,T.H.மார்ஷலின் குடியுரிமை சிந்தனைகள் மற்றும் மேற்படி குடியுரிமைப் பண்புகள் நவீன குடியுரிமையில் பிரதிபலிக்கும் விதம் என்பவற்றை கண்டறிய இவ்வாய்வு முயற்சிக்கின்றது. இவ்வாய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள் மற்றும் இணையத்தளங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததிலிருந்து நவீன குடியுரிமையானது அரசியல், சட்ட ரீதியானதாக காணப்படுவதுடன் ஆரம்ப காலங்களில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட குடியுரிமை என்பதிலிருந்து வேறுபட்டு பரந்துபட்டதாக உள்ளமையும் ஆய்வின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பிரதான சொற்கள்: குடியுரிமை, பிரஜை, சமூகக் குடியுரிமை, அரசியல் குடியுரிமை

## 1. அறிமுகம்

அரசறிவியல் தோன்றிய ஆரம்ப காலத்திலிருந்து பேசப்படும் ஒரு விடயமாக குடியுரிமை காணப்படுகின்றது. நவீன மானிட சமூகத்தின் ஒரு தலையாய நிறுவனமாக அரசு உள்ளது. அத்துடன் அரசின் அடிப்படையான கரிசனை மக்கள் பற்றியதாக உள்ளது. எனவே இத்தகைய அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவை வலியுறுத்தும் எண்ணக்கருவே குடியுரிமை ஆகும். கிறிஸ்துவுக்கு முந்தைய காலத்திலிருந்து குடியுரிமை எண்ணக்கரு அறிமுகம் செய்யப்பட்டு வரைவிலக்கணம் செய்யப்பட்டதுடன் பின்நாட்களில் பல்வேறு அமைப்புகள் மற்றும் அரசியல் விஞ்ஞானிகளால் மீள வரைவிலக்கணம் செய்யப்பட்டு வந்துள்ளது.

நீண்ட காலத்திற்கு முன் அரிஸ்டோட்டில் எனும் அறிஞர் குறிப்பிட்டதன்படி குடியுரிமை மற்றும் அதன் இயல்பு என்பன எப்போதும் சர்ச்சைக்குட்பட்ட விடயமாக உள்ளதுடன் அது தொடர்பாக தனித்துவமான வரைவிலக்கணம் தொடர்பில் எதுவித பொது உடன்பாடும் இல்லாமல் உள்ளது(Heater, 2004).இருப்பினும் இன்னமும் இச்சொற்பதம் உலகம் முழுவதும் மிகப் பொதுவான பயன்பாட்டில் உள்ளதுடன் நாளாந்த அரசியல் செயற்பாட்டின் மைய எண்ணக்கருவாகவும் உள்ளது.

TH.மார்ஷல் குறிப்பிடுவதன்படி குடியுரிமை என்பது ஒரு சமூகத்தின் முழு அங்கத்துவத்துடன் தொடர்புபட்ட விடயமாக உள்ளது. இவ்வங்கத்துவத்தினைக் கொண்டுள்ள அத்தகையவர்கள், அத்தகைய சமூகத்தோடு தொடர்புபட்ட அந்தஸ்து, உரிமை, கடமை என்பவற்றில் சமமானவர்களாக இருப்பர்.

Blackwell இன் கருத்தின்படி "குடியுரிமை என்பது அரசின் முழுமையானதும் பொறுப்பு மிக்கதுமான அங்கத்துவத்தைக் குறித்து நிற்கின்றது"The full and responsible membership of the state (Djeudo, 2013).சமூக விஞ்ஞானங்களில்

இதுநவீன அரசின் அபிவிருத்தியில் தனிமனிதனின் அந்தஸ்தினைக் குறிக்கின்றது.

குடியுரிமை என்பது ஒரு அரசின் சிவில், அரசியல், சமூக ரீதியான உரிமைகளை உள்ளடக்கிய சட்ட ரீதியான அந்தஸ்தாகும். இங்கு குடிமகன் அரசின் சட்ட ரீதியான அந்தஸ்தைப் பெற்றிருக்கிறான். அத்துடன் குடியுரிமை என்பது அரசியல் சமுதாயத்தின் உறுப்புரிமையைக் குறிப்பிடுவதுடன் சமூகத்தின் அரசியல் நிறுவனங்களில் பங்கேற்பதற்கான அரசியல் முகவராகவும்(political agent) குடிமகன் காணப்படுகின்றான்.

ஒரு அரசியல் சமூகத்தின் உறுப்புரிமையே குடியுரிமை எனப் பொதுவாக நோக்கலாம். ஒரு அரசியல் சமூகமானது பலதரப்பட்ட நபர்களைக் கொண்டிருக்கும். அதன்படி குடிமக்கள், அடிபணியும் அங்கத்தவர்கள், அந்நியர்கள், நாடற்றவர்கள் எனப் பலர் காணப்படும் வேளையில் அவர்களின் நிலை, அந்தஸ்து என்பவற்றைக் கொண்டு பிரஜைகளை அடையாளப்படுத்த முடியும். அடிபணியும் அங்கத்தவர்கள் பொதுவாக மன்னராட்சியில் காணப்படுவர். இவர்கள் அரசின் உறுப்பினர்களாகக் காணப்படினும் அரசுடன் ஒரு வழித் தொடர்பையே கொண்டிருப்பர். இங்கு அரசு மட்டுமே அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதாக இருப்பதுடன் அவர்கள் அரசில் பங்களிப்புச் செய்வதென்பது வரையறைக்குட்பட்டதாகவே இருக்கும். இது அரைகுறை குடியுரிமை எனப்படும்.

ஆனால் குடியுரிமை அல்லது குடிமக்கள் என்பது அரசின் முழு அளவிலான உறுப்புரிமையைக் குறிப்பிடுகின்றது. இவர்கள் அரசின் தீர்மானம் எடுக்கும் செயன்முறைகளில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களாக இருப்பதுடன் அரசின் சட்டங்கள் பிரஜைகள் மீது செல்வாக்குச் செலுத்தும். எனவே குடியுரிமை என்பது அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான இருவழித் தொடர்பைக் குறிக்கின்றது. இவ்வாறான குடியுரிமையைப் பெற்றவர்கள் அவ்வரசின் சட்ட ரீதியான குடிமக்களாவர்.

## 2. ஆய்வுப் பரச்சினை

பொதுவாகக் குடியுரிமை எனப்படுவது அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான உறவை விளக்குகின்ற ஒரு எண்ணக்கருவாகக் காணப்படுகின்றது. இவ்வாறான உறவு இருவழித் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் எதிர்பாக்கப்படுகின்றது. அந்தவகையில் ஆரம்பகாலக் குடியுரிமைகளில் தனிமனிதனை அரசுடனும் ஏனைய சக மனிதர்களுடனும் இணைக்கக்கூடிய பண்புகள், அவற்றிலிருந்து நவீன குடியுரிமை பெற்றுக்கொண்ட விடயங்கள், மற்றும் வேறுபடும் விதம் என்பவற்றை உள்ளடக்கியதாக ஆய்வுப் பிரச்சினை காணப்படுகின்றது.

## 3. ஆய்வு நோக்கம்

குடியுரிமை என்றால் என்ன? கிரேக்காலக் குடியுரிமை, ரோமானிய காலக் குடியுரிமை,T.H. மார்ஷலின் குடியுரிமை சிந்தனைகள் மற்றும் மேற்படி குடியுரிமைப் பண்புகள் நவீன குடியுரிமையில் பிரதிபலிக்கும் விதம் என்பவற்றை கண்டிறிவதை ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள் மற்றும் இணையத்தளங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

## 5. கிரேக்க காலக் குடியுரிமை

குடியுரிமை பற்றிய கருத்து மற்றும் நடைமுறை என்பன முதன்முதலாக கிரேக்க மெய்யிலாளர்களால் விரிவாக ஆராயப்பட்டன. அவர்களைப் பொறுத்தவரை பொது வாழ்வில் பங்கேற்பது என்பது மனித ஆளுமையின் பூரணமானதும் முறைமையானதுமான அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும்.

இக்காலத்தில்குடியுரிமை தொடர்பான கருத்துக்களை வெளியிட்டவர்களுள் அரிஸ்டோட்டில் முக்கியம் பெறுகின்றார். இவர் தன்னுடையPoliticsஎன்ற நூலில் குடியுரிமை தொடர்பான கருத்துக்களை முன்வைக்கின்றார். இவரின் நூலில் மனிதன் என்பவன் அரசியல் பிராணி எனவும் நகர அரசு விவகாரங்களில் பங்குபற்றுவதன் மூலம் தனது வாழ்வின் முழுமையான ஆற்றலையும் ஆளுமையையும் அடைந்து கொள்ள முடியும் (Heater, 2004) என்கிறார்.

இவரைப் பொறுத்தவரை பிரஜை என்பவன் சட்டமன்ற அல்லது நீதித்துறை பதவிகளில் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமையினைப் பெற்றவன் ஆவான். மேலும் பிரஜைகள் ஆள்வோரும் பதிலுக்கு ஆளப்படுவோர்களாகவும் இருப்பர்.அதன்படி அரசியல் வாழ்வில் முழுமையான பங்கேற்பைக் கொண்டிருப்பர். நகர அரசில் வாழ்ந்த மக்கள் அனைவரும் பிரஜைகள் அல்ல என்பதை வலியுறுத்தும் இவர் நகர அரசில் அடிமைகள், வெளிநாட்டவர்கள் என்போரும் வாழ்கின்றனர் என்றும் அவர்கள் அனைவரையும் பிரஜைகள் எனக் கருத முடியாது என்றும் குறிப்பிடுகின்றார் (Euben, Wallach & Ober, 1994).

அந்தவகையில், பிரஜைகள் என்போர் சமூகத்தில் வாழும் ஒரு பிரத்தியேகமான குழுவினையே

குறிப்பிடுகின்றது. இப்பிரஜைகளை வரையறுக்கும்போது, எதேனிய குடும்பத்தில் பிறந்தவரும் 20 வயதுக்கு மேற்பட்ட ஆணாகவும் இருக்க வேண்டும். இவர்கள் மற்றவர்களில் தங்கியிராத சொத்துக்களைப் பெற்றவராக இருப்பதுடன் பொது வாழ்வில் முழுமையான ஈடுபாட்டையும் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வரையறையின்படி வெளிநாட்டவர்கள், பெண்கள்,கிராமப்புற விவசாயிகள்,அடிமைகள் என்போர் குடியுரிமை மற்றும் அரசியல் பங்குபற்றலில் இருந்து புறந்தள்ளப்பட்டனர். பிரஜைகள் மாத்திரமே சொத்தினைக் கொண்டிருக்க அனுமதிக்கப்பட்டதுடன் அவர்கள் அரசியல்வாதி, நிர்வாகிகள், நீதிபதிகள் மற்றும் படைவீரர்களின் பணிகளைப் புரிவதற்கும் எதிர்பார்க்கப்பட்டனர்.

குடியுரிமை தொடர்பான கிரேக்க மாதிரியானது ஒரு வரப்பிரசாதமாகக் கருதப்பட்டதுடன் அது எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கே வழங்கப்பட்டது. இது நகர அரசினை ஆளும் குழு கொண்டிருக்க வந்த சிறப்புரிமைக்கான அந்தஸ்தாக இருப்பதுடன் சட்டவாக்கம் மற்றும் அதன் அமுலாக்கத்தில் வினைத்திறனுடன் பங்குபற்றியவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டது.

அரிஸ்டோட்டில் ஒரு அரசில் வாழும் அனைவரையும் குடிமக்களாக வகைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை எனக் குறிப்பிடுவதுடன் அவரின் குடியுரிமை பற்றிய கருத்து 3 பண்பினைக் குறித்து நிற்கின்றது.

1. குடிமகன் என்பவன் குறிப்பிட்ட சில பணிகளைப் புரியும் ஒரு நபர் ஆவான்
2. தனது பணியினைப் புரிவதற்குசெயலூக்கத்துடன் பங்குபற்றுபவன் ஆவான்.
3. இத்தகைய பங்குபற்றுதலில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை மட்டுப்பாட்டுக்குள் உட்படுகின்றது.

இவ்விடயத்தை மேலும் எளிமையாகக் கூறின் குடியுரிமை என்பது பொதுவாழ்வில் அல்லது பொதுவிவகாரங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையான மனிதர்களின் பங்கேற்பினை குறிக்கின்றது. இக்குடியுரிமையானது அரசியல் குடியுரிமையாகக் காணப்பட்டது.

6. ரோமானிய காலக் குடியுரிமை

கிரேக்க காலத்தை அடுத்து ரோமானிய காலம் ஆரம்பமானது. இக்காலத்தில், கிரேக்க காலத்தில் வரையறைக்குட்பட்டிருந்த குடியுரிமையானது விரிவுபடுத்தப்பட்டதை அவதானிக்கலாம். அதன்படி ரோமானியக் குடியரசானது பிற்காலங்களில் ரோமானியப் பேரரசாக விரிவானதைத் தொடர்ந்து குடியுரிமையும் விரிவுபடுத்தப்பட்டது. சட்டவிடயங்களில் கவனம் கொண்டதும் நிர்வாக விடயங்களில் இசைவாக்கம் அடையவும் ரோமானியர்கள் பல்தன்மை வாய்ந்த நெகிழ்ச்சியானதும் சட்டத்தன்மை மிக்கதுமான குடியுரிமையை அபிவிருத்தி செய்தனர். இத்தகைய ரோமானியக் குடியுரிமையை கிரேக்க காலத்திலிருந்து வேறுபடுத்தும் அடிப்படையான விடயம் அனுகூலமற்ற நிலையிலிருந்த வெளிநாட்டவர்களுக்கும் (வர்த்தகர்கள், வியாபாரிகள்) விஸ்தரித்தமையாகும் (Djeudo, 2013).இதனால் அபிவிருத்தி அடைந்த சட்ட முறையின் செல்வாக்கானது பிரஜை மற்றும் பிரஜை அல்லாதோருக்கு இடையிலான இடைவெளியைக் குறுகியதாக்கியது. பிரஜைகளின் விகிதாசாரம் அதிகரித்தமையானது குடியுரிமையின் முக்கியத்துவத்தினை வீழ்ச்சியடையச் செய்தது. ஆரசியலிலானபங்கேற்பு அர்த்தமற்றதாகியதுடன் நீதித்துறை சார்ந்த அதிகாரிகள் சுயாதீன செல்வாக்கு மற்றும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.எனினும் நடைமுறையில் பாராபட்சங்கள் காட்டப்பட்டதனால் ரோம் நகரில் வாழ்ந்த வெளிநாட்டவர்கள் எதிர்ப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். அதன் விளைவாக 12 அட்டவணைகள் எனும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதுடன் பல நூற்றாண்டுகளாக இதுவே ரோமானிய சிவில் சட்டத்தின் அடிப்படையாகவும் இருந்தது. இவ்வட்டவணையானது குடியுரிமை தொடர்பான 6 வரப் பிரசாதங்களை குறித்து நின்றது (Djeudo, 2013).அவையாவன:

1. இராணுவத்தில் சேவை புரிதல்
2. சட்டசபையில் வாக்களித்தல்
3. பொதுப் பதவிகளை வகிப்பதற்கான தகுதி
4. சட்ட நடவடிக்கைகளுக்கான உரிமைகளும் மேன்முறையீட்டு உரிமையும்
5. பரஸ்பர திருமணம்
6. ஏனைய ரோமானியக் குடிமக்களுடன் வர்த்தகம் செய்தல்

பிற்காலங்களில் போரில் தோற்கடிக்கப்பட்ட பகுதியிலுள்ள அனைத்து ஆண்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது. அத்துடன் இரட்டைக்குடியுரிமை எண்ணக்கருவும் அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி தான் வாழ்ந்த நகர அரசின் குடியுரிமை மற்றும் ரோமப் பேரரசின் குடியுரிமை ஆகிய இரண்டையும் ஏககாலத்தில் குடிமக்கள் அனுபவித்தனர். பிற்காலங்களில் கரகல்லா போன்ற ஆட்சியாளர்கள் அடிமைகள் தவிர்ந்த அனைத்து ரோமப் பேரரசு வாழ் ஆண்களுக்கும் குடியுரிமை வழங்கியமையானது குடியுரிமையின் அந்தஸ்து மற்றும் புகழ் என்பவற்றை மழுங்கடித்ததுடன் பிரஜைகள் மத்தியில் பொறுப்புணர்வற்ற தன்மையை ஏற்படுத்தியது(Djeudo, 2013).

இவ்வாறு குடியுரிமை விஸ்தரிக்கப்பட்டமைக்கான காரணமாக வரிப்பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கம் மட்டுமே காணப்பட்டதுடன் அதனாலான அனுகூலத்தினாலல்ல. அதனால் குடியுரிமை உயர் தன்மையிலிருந்து நீங்கி மலிவான ஒன்றாக மாறியது.

ரோமானிய குடியுரிமையானது சட்டத்தின் முன் சமத்துவம் என்ற தத்துவத்தை தாங்கி வந்ததுடன் அது முன்னைய அரசியல் ரீதியான குடியுரிமையை விட சட்ட ரீதியான குடியுரிமைக்கே முக்கியத்துவத்தை வழங்கியது.

இந்தவகையில் மாற்றமடைந்த குடியுரிமை எண்ணக்கருவினூடாக ரோமானியர்கள் சட்டத்தின் முன் சமத்துவம் என்ற பரிணாமத்தின் மூலம் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருக்க வந்தது. எனினும் ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியானது படிப்படியாக குடியுரிமையின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்ததுடன் குடியுரிமை அந்தஸ்தை விட வர்க்க அந்தஸ்து எழுச்சிடைய வழிவகுத்தது எனலாம்.

## 7. TH.மார்ஷலின் குடியுரிமை தொடர்பான கருத்துக்கள்

TH. மார்ஷல் லண்டனிலுள்ள பொருளியல் மற்றும் அரசியல் பாடசாலையில் சமூகவியல் பேராசிரியராக கடமையாற்றினார். இவர் 1949ஆம் ஆண்டு 'குடியுரிமையும் சமூக வகுப்பும்'(Citizenship and Social Class)எனும் தலைப்பில் குடியுரிமை தொடர்பான பல்வேறு விளக்கங்களை முன்வைக்கிறார். மேலும் குடியுரிமை தொடர்பாக இக்காலகட்டத்தில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றமை பிரதான விடயமாகும். இந்தவகையில் இவரது குடியுரிமை தொடர்பான கருத்துக்களை பின்வருமாறு நோக்க முடியும்.

முதலில் குடிமகனை வரையறை செய்யும் போது 'சமூகத்திலுள்ள அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவராகவும் சமூக மரபுரிமையைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவராகவும் சமூக நடத்தைக்கு உட்பட்டவராகவும் மாறுகின்றவரை குடிமகன்' என்றார். அவ்வாறே மனிதனின் வாழ்க்கை முறையை(Life Style)மாற்றுவதற்கு சமூக அந்தஸ்துடையவர்களை பிரதான கருவியாகப் பயன்படுத்துகிறார். அதாவது பொருளாதாரம் மற்றும் கல்வியல் ரீதியாக ஏற்படும் முன்னேற்றங்களைச் சுட்டிக்காட்டுகிறார்(Herrmann, 2004).1940களில் சமூகத்தில் காணப்பட்ட குடியுரிமை பற்றிக்குறிப்பிடும் போது மதிப்பு மற்றும் சமூகத்தில் காணப்படும் சமமின்மையால் கட்டியெழுப்பப்பட்டதாகக் கூறுகின்றார். இச்சூழலைக் கருத்தில் கொண்டு TH. மார்ஷல் 04 வினாக்களை எழுப்புகிறார் (Heater, 1999).அதாவது,

01. போட்டி நிறைந்த சந்தையில் சுதந்திரமில்லாமல் அடிப்படைச் சமத்துவம் கட்டியெழுப்பப்படுமா?
02. சமூகமயம் மற்றும் சந்தையினுடைய துணை விளைவுகளால் என்ன தாக்கம் ஏற்பட்டது?
03. ஒருவரின் கடமையிலிருந்து உரிமைக்கு மாற்றப்படும் போது எவ்வாறான தாக்கம் ஏற்படும்?
04. சமூக சமநிலையை ஏற்படுத்த நவீன வரையறை ஏதும் இருக்கிறதா?

இவ்வாறான 04 கேள்விகளும் தன்னுள் எழுந்ததன் காரணமாக இவர் வரலாற்று மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டார். இந்த மதிப்பீட்டிற்காக குடியியல் மற்றும் சமூகத்திலிருந்து குடியுரிமையினை பகுப்பாய்வு செய்ய ஆரம்பித்தார்.

இதன் பிறகு மார்ஷல் குடியுரிமை தொடர்பாக வரையறை செய்யும் போது 03 விதமான முறையில் குடியுரிமையினை வரையறை செய்கிறார்.

01. சிவில் குடியுரிமை
02. அரசியல் குடியுரிமை
03. சமூகக் குடியுரிமை

இவ்வகையில் ஆரம்பத்தில் சிவில் குடியுரிமை பற்றியும் அரசியல் குடியுரிமை பற்றியும் பேசினாலும் 20ஆம் நூற்றாண்டிலேயே சமூக குடியுரிமை பற்றியும் பேசுகிறார். இவற்றுள் சமூக குடியுரிமையிலே அதிக நாட்டம் கொண்டவராக காணப்பட்டார்.

### 7.1 சிவில் குடியுரிமை:

சிவில் குடியுரிமை பற்றிக் கூறும் போது இது தனிமனிதனின் சுதந்திரம், அடிப்படை உரிமைகளோடு இணைந்ததாகக் காணப்படுகின்றது என்றார். அந்தவகையில் பேச்சுச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், தனக்குத் தேவையான சொத்துக்களை வைத்திருத்தல், மற்றவருடன் தொடர்பு கொள்ளல், நீதியைப் பெறும் உரிமை போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையும் என்றார். இதனை*Legal Citizenship*எனவும் அழைத்தார்.

### 7.2 அரசியல் குடியுரிமை:

வாக்களித்தல், அரசியல் விடயங்களில் பங்குபற்றுதல், அரசியல் மூலகங்களில் இருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளல், சுய அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது பிரதிநிதியைத் தெரிவு செய்தல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு மற்றும் சமூக மரபுரிமையைப் பகிர்ந்து கொள்ளல், சமத்துவம் பேணல் போன்ற பல்வேறு விடயங்களை அரசியல் குடியுரிமைக்குள் உள்ளடக்குகிறார்.

7.3 சமூகக் குடியுரிமை:

சமூக குடியுரிமையிலே அதிக ஆர்வம் கொண்டவராகTH.மார்ஷல் காணப்பட்டார். சிவில் மற்றும் அரசியல் அதிகாரங்கள் வெறும் வாய்ச்சொல்லாகவே அமையும் என்றும் சமூகக் குடியுரிமையே சமூகத்தில் சமநிலையைப் பேணும் எனவும் பரிந்துரைக்கிறார். அந்தவகையில் 20ஆம் நூற்றாண்டில் தனது பிரதான நோக்காகக் கொண்டிருந்த*Social Citizenship*என்ற விடயத்தைத் தெளிவுபடுத்துகிறார்.இவர் நவீன குடியுரிமையின் முன்னோடியாகவும் காணப்படுகின்றார்.

19ஆம் நூற்றாண்டு இறுதிக் காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் சமூகக் குடியுரிமையில் பாரிய மாற்றங்களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியது.இதற்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து மக்களுக்கு உத்தரவாதம் வழங்கி சமூக சமநிலையைப் பேணுவதற்கு சமூகக் குடியுரிமை அவசியமானது என்கிறார். மேலும் சமூக உரிமைகள் குடியியல் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாக அமையும் என்கிறார். அதாவது குடியியல் உரிமையில் காணப்படுகின்ற சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை சுதந்திரமாகப் பேசும் உரிமை போன்றவற்றை சமூக உரிமை கட்டுப்படுத்துவதாக அமையும்.

TH. மார்ஷல் தனது நூலில் குடியுரிமையின் இயல்பினை விளக்குகின்றார். இது முதலாளித்துவ சமூகத்தின் வரலாற்று அபிவிருத்தி தொடர்பில் நவீன தேசிய அரசுகளின் முறைமையின் தோற்றம் பற்றிய விளக்கத்தினை வழங்குகின்றது. மாக்சிய முடிவுக்கு எதிரான வகையில் மார்ஷல் முதலாளித்துவம் ஒரு முறைமையான வளர்ச்சி அடைந்தமையினால் குடியுரிமை எண்ணக்கருவானது நிலைமாற்றத்திற்குட்பட்டது என வாதாடுகின்றார்.

TH.மார்ஷல் குடியுரிமை என்பது ஒரு சமூகத்தின் பூரண அங்கத்துவத்துடன் தொடர்புபட்ட ஒரு அந்தஸ்தாக உள்ளதுடன் அத்தகைய அந்தஸ்தினை கொண்டுள்ளவர்களின் உரிமைகள், அதனோடு இணைந்த கடமைகள் தொடர்பில் சமமானவர்கள் எனும் விடயத்திலிருந்து தனது கருத்தினைத் தொடங்குகின்றார். இருப்பினும் பொதுவாக அவசியமான உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயிக்கும் எத்தகைய உலகளாவிய கோட்பாடுகளும் இல்லையாதலால் வேறுபட்ட சமூகங்கள் குடியுரிமையின் அந்தஸ்துக்கு வெவ்வேறுபட்ட உரிமைகள் மற்றும் கடமைகளை இணைக்கின்றனர்.

இங்கிலாந்தின் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு பேசுகையில் நவீன குடியுரிமை நிறுவனங்களின் அபிவிருத்தி மற்றும் முதலாளித்துவத்தின் எழுச்சியோடு ஒருங்கே இணைந்ததெனக் குறிப்பிட்டார். ஒரு கோட்பாடு என்றவகையில் குடியுரிமை உயர் குடியாட்சி சிறப்புச் சலுகைகளுக்கு எதிரான சமூகத்தில் சிறந்த பிரதிநிதித்துவத்தினை ஏற்படுத்தும் பூர்சுவா வர்க்கத்தின் தேடலாக இருந்தது. இதனால் இது மானிய முறை வர்க்கத்தின் மரபு ரீதியான சலுகைகளை பலவீனப்படுத்தியதுடன் புதிதாக எழுச்சியுற்ற முதலாளித்துவ வர்க்க உறவுகளை பலப்படுத்தியது. எனவே குடியுரிமை என்பது சிவில் மற்றும் சட்ட சமத்துவத்தை குறித்து நிற்கின்றது. குடியுரிமையினுடைய சிவில் பகுதி தனிமனித சுதந்திரத்திற்கு அவசியமான உரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் அதனோடு தொடர்புபட்ட நிறுவனங்கள் என்ற வகையில் சட்டவாட்சி மற்றும் நீதிமன்றம் போன்றன காணப்பட்டன.

மற்றவர்களிடையில் பரஸ்பரம் மாற்றிக் கொள்ளும் உரிமைகள், கடமைகள், மக்களின் நலன்களோடு தொடர்புடைய எண்ணக்கருக்கள் போன்றன அரசின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. இதனால் ஒரு தனிநபர் மற்றும் சமூக நிறுவனங்களால் அவர்களுக்கு உரிமை, கடமை மற்றும் நலன்புரி சேவை வழங்கப்பட்டன. இது சமூக நிலைமையினதும் ஜனநாயகத்தினதும் அவசியத்தை உணர்த்தியது. மேலும் இவர் குடியுரிமையினை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் போது பெண்களுக்கான உரிமை பற்றி கருத்துத் தெரிவித்தார். இதன் மூலம் பெண்களுக்கான வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. பெண்ணிலைவாதிகளின் விவாதம் மார்ஷலின் கோட்பாட்டுடன் ஒத்துப்போனது. அதாவது அனைத்துக் குடிமகனும் சட்டத்தின் கீழ் சமமானவர்கள் என்ற கருத்திற்கமைய பெண்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அரசியலில் பங்குபற்றும் உரிமையை இக்குடியுரிமை வழங்கியது. எனவேதான் இக்குடியுரிமையானது பரிணாம சிந்தனைகளைப் பின்பற்றி ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

நேரடி ஆதாரங்களினூடாக கிரேக்கம், உரோம பாரம்பரிய ஜனநாயக மற்றும் மார்ஷலின் பகுப்பாய்வு என்பன சமமாக இருந்ததினூடாக உரிமைகள் பற்றிய அறிவு பாடசாலை விதானங்களில் கற்பிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஜனநாயகத்தின் வரலாறு மற்றும் அபிவிருத்தி என்பன பல்வேறு கல்வியல்சார் ஒழுங்கு முறைகளை வரைவதற்கு துணையாக அமைந்தது.

மார்ஷல் நவதாராண்மைவாத சிந்தனை கொண்டவர். இவர் பூரண சந்தைத் தொழிற்பாட்டை பொருளாதாரத்தின் அடிப்படை எனவும் அதுவே சிறந்த சமூகத்தின் பண்பும் என்றார். மேலும் சமூகநலப் பொறுப்புக்களையும் சமூகநலத்திட்டங்களையும்

நவதாராண்மைவாதிகளின் கீழ் நிலை மக்களுக்கு உதவக்கூடிய திட்டங்கள் எனக்கூறுகிறார். இதுவே அவர் குறிப்பிடுகின்ற அரசியல் உரிமை மற்றும் அவர்களுடைய சமூக வினைத்திறனான பயன்பாடு எனவும் குறிப்பிடுகிறார். இது கீழ்நிலை மக்கள் மத்தியில் அவர்களது வாய்ப்புக்களை அதிகரிப்பதோடு கலாசாரத்தை தாக்கும் பண்புகளை இல்லாமல் செய்கின்றது. எனவே சமூக நலனை அமுல்படுத்துவது தேவைப்பாடுடையது என்கின்றார்.

8. நவீன குடியுரிமை பற்றிய விமா்சனங்கள்

நவீன குடியுரிமையானது அரசியல் மற்றும் சட்ட ரீதியான உரிமைகளை வழங்குகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இக்குடியுரிமையானது குடிமக்களின் கடமை மற்றும் பொறுப்புக்களைக் குறிக்கின்றது. இது அரசியல் சமூகத்தின் ஆசியல், பொருளாதார, சமூக அபிவிருத்தி உட்பட தேசிய அபிவிருத்தியில் பங்குபற்ற குடிமக்களை அழைக்கின்றது. குடிமக்களின் உரிமை அபிவிருத்தி அதன் பாதுகாப்பு தொடா்பில் அரசு கூடிய பொறுப்புடன் காணப்பட வேண்டும் என்கின்றது.

இந்நவீன குடியுரிமையில் புராதன கிரேக்க, ரோமானிய மற்றும் மாா்ஷலின் குடியுரிமை பற்றிய கருத்துக்கள் பிரதிபலிப்பதைக் காணலாம். அதன்படி கிரேக்ககால குடியுரிமையில் காணப்பட்ட அரசியல் உரிமை என்ற விடயம் நவீன குடியுரிமையிலும் பிரதிபலிக்கின்றது. பிரஜைகள் அந்நாட்டின் அரசியல் விடயங்களில் பங்குபற்றுவதற்கான உரிமையானது இன்றைய நவீன குடியுரிமையிலும் காணப்படுகின்றது. அத்துடன் பிரஜைகள் எல்லோரும் சமமான உரிமையைப் பெற்றிருந்ததுடன் சட்டத்தின் முன் சமமாகக் காணப்பட்டமையும் சட்டவாட்சிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை உட்பட பல விடயங்களை நவீன குடியுரிமை கொண்டுள்ளது.

நவீன குடியுரிமையின்படி ஒரு பிரஜை அனைத்து உரிமைகளையும் அனுபவிக்க உரிமை கொண்டிருந்தாலும் தனிப்பட்ட அபிவிருத்திக்கு அரசில் தங்கியிருப்பதில்லை இது தாராளவாதக் கருத்துடன் ஒத்துப் போகின்றது. அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் இவ்விடயத்தைப் பேசிய ஆரம்பகால ஆவணமாகும். நவீன குடியுரிமையின் முக்கிய தொழிற்பாடு சிவில் உரிமை மற்றும் சுதந்திரத்தை வழங்குவதாகும். பிரித்தானிய அரசியலமைப்பு, மக்னா காட்டா, உரிமைகள் மனு என்பன சிவில் உரிமை மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றைக் குறிக்கின்றன.

உற்பத்தி மீதான முதலாளித்துவப் பொருளாதார முறையானது சமூக மாற்றத்தின் ஆதிக்க சக்தியாக காணப்பட்டதுடன் சிவில் உரிமை தொடா்பாகவும் கவனம் செலுத்தத் தூண்டியது. எதென்சியக் குடியுரிமையானது தற்காலத்தில் தாராளவாதம், கம்யூனிசம் போன்ற எண்ணக் கருக்களால் அபிவிருத்தி செய்யப்பட்டது. அரிஸ்டோட்டிலின் ஆள்வதும் ஆளப்படுவதும் என்ற குடியுரிமையானது சுயாட்சிக்கும் சுதந்திரப் பங்குபற்றலுக்கும் வழிவகுத்தது.

மேலும் நவீன குடியுரிமையின் அடுத்த முக்கிய விடயம் எல்லா குடிமக்களினதும் சமூக வளங்களைப் பாதுகாப்பதற்கான சமூக உரிமைகளை அரசு வசப்படுத்திக் கொடுப்பதாகும். 19ம் 20ம் நூற்றாண்டுகளில் அமெரிக்கக் குடியுரிமையானது நலன்புரி அரசின் தோற்றத்தோடு அபிவிருத்தி செய்யப்பட்டது.

இன்னும் பிரஜைகள் என்போா் ஆள்வோராகவும் ஆளப்படுவோராகவும் இருப்பா் எனும் கிரேக்க குடியுரிமை என்பதற்கிணங்க நவீன யுகத்தில் பிரஜைகளே ஆள்வோரைத் தெரிவு செய்பவா்களாக இருப்பதுடன் அரசாங்கத்திற்கு அடிபணிந்தும் செயற்படுகின்றனா்.

அதேபோல ரோமானியக் குடியுரிமையில் காணப்பட்ட பல விடயங்கள் நவீன குடியுரிமையில் கண்டுகொள்ள முடியும். அக்காலத்தில் காணப்பட்ட சட்ட ரீதியான குடியுரிமையானது நவீன குடியுரிமையின் ஒரு அம்சமாகக் காணப்படுகின்றது. அதன்படி சட்டத்தின் முன் சமம் என்ற தத்துவம் இன்றைய நவீன அரசுகளிலும் பின்பற்றப்படுகின்றது. அத்துடன் பிரஜைகள் வரி செலுத்தக் கடமைப்பட்டவா்கள் என்ற ரோமானியக் குடியுரிமைப் பண்பின்படி நவீன குடியுரிமையிலும் பிரஜைகள் வரி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனா்.

நவீன குடியுரிமையின் பண்புகளை விளக்குவதில் மாா்ஷலின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மாா்ஷல் முதலாளித்துவ சமூகத்தோடு இணைந்த வகையில் குடியுரிமை பற்றிய கருத்துக்களை முன்வைக்கின்றாா். அவரின் சிவில், அரசியல், சமூக உரிமைகளை உள்ளடக்கிய குடியுரிமையாகவே தற்கால நவீன குடியுரிமை காணப்படுகின்றது. மாா்ஷலின் குடியுரிமையில் காணப்பட்ட சிவில் உரிமைகளும் அரசியல் பங்குபற்றலும் சட்டத்தின் முன் சமத்துவம் என்ற விடயமும் சமூக உரிமைகள் போன்றனவும் நவீன குடியுரிமையில் உள்வாங்கப்பட்டுள்ளன. அத்துடன் மாா்ஷலின் குடியுரிமையின்படி பெண்களும் குடியுரிமை பெற வேண்டும் என்ற விடயம் நவீன குடியுரிமையில் பிரதிபலிக்கின்றது.

எனினும் இம்மூன்று காலகட்டத்திலுமான குடியுரிமை பற்றிய கருத்துக்கள் நவீன குடியுரிமையுடன் சில விடயங்களில் ஒத்துப்போனாலும் அநேக விடயங்களில் மாறுபட்டதாக உள்ளன.

அந்தவகையில் கிரேக்க மற்றும் ரோமானிய காலக் குடியுரிமையானது பிரஜைகளுக்கு உரிமையுடன் கூடிய குடியுரிமையை வழங்குவதை விடுத்து பெரும்பாலும் கடமையுடன் இணைந்ததான குடியுரிமையைப் பற்றியே குறிப்பிடுகின்றன. நவீன குடியுரிமையானது, உரிமை மற்றும் கடமை என்பவற்றுடன் இணைந்ததான குடியுரிமையாகவே காணப்படுகின்றது.

மேலும் கிரேக்க காலத்தில் குடியுரிமை என்பது வரையறுக்கப்பட்ட ஒன்றாக இருந்ததுடன் பிரஜைகள் ஏனையவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாகவும் உயர் அந்தஸ்தை உடையவர்களாகவும் காணப்பட்டனர் (Djeudo, 2013).நவீன குடியுரிமையானது வரையறுக்கப்பட்ட ஒன்றாக இல்லாததுடன் பரந்துபட்ட ஒன்றாகவும் உள்ளது. அதேபோல கிரேக்ககாலக் குடியுரிமையானது ஆண்களுக்கு மட்டும் உரியதாக இருந்தது. அது பெண்களுக்கு வழங்கப்படாததுடன் பெண்கள் சொத்துக்களை வைத்திருத்தல் மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபடல் என்பவற்றிலிருந்து ஒதுக்கப்பட்டனர். ஆனால் நவீன குடியுரிமையானது பெண்களையும் உள்வாங்கியதுடன் பெண்களுக்கு சமமான உரிமைகளை வழங்கியுள்ளது.

அதேபோல ரோமானியக் குடியுரிமையிலும் பெண்கள் புறந்தள்ளப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். எனவே இக்குடியுரிமையும் நவீன குடியுரிமையிலிருந்து வேறுபட்ட ஒன்றாக காணப்பட்டது.

மேலும் அக்காலத்தில் அடிமைகள் என்போர் குடியுரிமை வழங்குவதிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். ஆனால் தற்கால நவீன குடியுரிமையில் அடிமைகள் என்ற பாகுபாடு முக்கியம் இழந்து வருகின்றது. அத்துடன் சொத்துடையவர்களுக்கு மட்டுமே குடியுரிமை என்ற குடியுரிமை பெறுவதற்கான தகுதியானது நவீன குடியுரிமை வழங்கலில் நீக்கப்பட்டுள்ளது.

கிரேக்க காலத்தில் குடியுரிமை பெறுவதற்கு எதென்சிய நகர அரசில் எதென்சிய குடும்பத்தில் பிறந்தவராக இருக்க வேண்டும். குடியுரிமை பெறுவதற்கு குறிப்பிட்ட அரசில் பிறந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை நவீன குடியுரிமையைப் பெறுவதற்கு கட்டாயமான ஒன்றாக இருக்கவில்லை.

கறுப்பினத்தவர்கள், பழங்குடியினர், இனக்குழுவினர், ஓரினச் சேர்க்கையாளர்கள், வேலையற்ற இளந்தரப்பினர் போன்றவர்கள் காணப்படுகின்றனர். அவர்கட்கு குடியுரிமை தொடர்பான பொதுஉரிமை காணப்பட்டாலும் அவர்கள் குடியுரிமையின் பூரணத்தை அனுபவிக்காத வகுப்பினராகக் காணப்படுகின்றனர். இவ்வடிப்படையில் மார்ஷலின் கருத்து பொருத்தமற்றதாகும். மார்ஷல் சமூக உரிமை தொடர்பாக கவனம் செலுத்தும்போது மக்களின் கலாசார, மொழி, மத உரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்தவில்லை.

நலன்புரி அரசுக்கு அவர்களின் எதிர்பார்ப்பானது சமூக உரிமை ஊடாக மேற்கொள்ளப்படும் நலன்புரி அரச நடவடிக்கைகளினால் பிரஜைகள் அரசில் தங்கியிருக்கும் செயற்திறனற்றவர்களாக மாறுவர் என்பது மார்ஷலின் கருத்துக்கு எதிரான விமர்சனமாகும்.

கிரேக்க நகர அரசுகளில் குடியுரிமையின் இயல்பு மற்றும் உபயோகம் என்பன நவீன தேசிய அரசுகளில் அவ்வெண்ணக்கரு யதார்த்தமாக்கப்பட்டதுடன் வேறுபாடான ஒன்றாகவும் காணப்படுகின்றது. அடையாளம் மற்றும் உயர்வினை வழங்குவதற்கு தோற்றம் பெற்ற இவ்வெண்ணக்கரு சமூக அமைதியின்மையின் மூலமாக மாற்றமடையும் நிலையில் உள்ளது.

குடியுரிமை பற்றிய கருத்தின் விளக்கம் மற்றும் உண்மைப்படுத்தல் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் உடன்பாடின்மைகள் நிலவுகின்றன. பிரதானமாக உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் உண்மையான குடியுரிமையினை வழங்குவது என்பது பல்வேறு எதிரிடையான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளது. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

குடியுரிமை என்பது அரசியல் பங்கேற்பினைக் கருதுமேயானால் அரசியல் செயன்முறையில் குறைந்த மட்டத்திலான மக்கள் பங்கேற்பினை நோக்கிய போக்கு காணப்படுகின்றது. அத்துடன் அனைத்துப்பிரஜைகளும் சமமானவர்களானால் அவர்கள் பங்கேற்பு செயற்பாட்டிற்கான சமத்துவ வாய்ப்புக்கள், உந்துதலை அவசியம் கொண்டிருக்க வேண்டும்.

குடியுரிமையானது பொருளாதார மற்றும் சமூக துறையில் காணப்படும் எண்ணிறைந்த சமத்துவ முறை செயன்முறையினால் திரிபுபடுத்தப்பட்டுள்ளது. உண்மையில் சமூக குடியுரிமை எனும் எண்ணக்கரு இன்னமும் பாரிய நம்பிக்கையின்மையை ஏற்படுத்தும் ஒரு பரப்பாக உள்ளது. சமூக சமத்துவம் என்பது ஒரு சில நாடுகளில் மாத்திரம் எட்டப்பட்டதொன்றாக உள்ளது. உலகளாவிய ரீதியில் சமூகக் குடியுரிமைக் கோட்பாடு, நடைமுறை ஆகிய இரண்டும் யதார்த்தத்திலிருந்து தூரமாகவே உள்ளன.

ஏழை, பணக்காரன் ஆகியவற்றுக்கு இடையிலான பாரிய இடைவெளி காரணமாக அபிவிருத்தி குன்றிய நாடுகளில் குடியுரிமையின் பலாபலன்கள்

கீழ்மட்ட, ஒதுக்கப்பட்ட குழுக்களை இன்னும் அடைய வேண்டியுள்ளது. இத்தகைய சமூகங்கள் இன்னமும் உள்ளூர், இன, சமய, கோத்திர

விசுவாசங்களுக்கு உட்பட்டவையாகவும் தேசிய-ஐக்கிய உணர்வு என்பது இத்தகைய சமூகங்களில் இல்லாமலும் உள்ளது.
பெண்கள் உலகின் பல துறைகளில் பங்குபற்றிய போதும் அரசியல் நிறுவனங்களில் குறைந்தளவிலே பிரதிநிதித்துவம் பெறுகின்றனர். இன்னும் சில நாடுகளில் அவர்கள் இன்னமும் வாக்குரிமையைக் கொண்டிருக்கவில்லை.

பல்கலாசார சமூகங்களில் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பில் பாரதூரமான பதட்டங்கள் ஏற்பட்டவண்ணமே உள்ளன. அரசியல் அதிகாரம் என்பது பிரஜைகளினாலன்றி உயர் குழாமினரால் நிர்ணயிக்கப்படும் இலக்குகளை அடைவதற்கே பயன்படுத்தப்படுகின்றது.

9. முடிவுரை

குடியுரிமை என்பது அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான இருவழித் தொடர்பைக் குறிக்கின்றது. இவ்வாறான குடியுரிமையைப் பெற்றவர்கள் அவ்வரசின் சட்ட ரீதியான குடிமக்களாவர். குடியுரிமையானது 2500 வருட கால பாரம்பரியத்தை கொண்டுள்ளதுடன் இன்று வரை பல்வேறு பரிணாமங்களை அடைந்து வந்துள்ளது. பிளேட்டோ, அரிஸ்டோட்டிலின் கிரேக்க நகர அரசுகள், ரோமப் பேரரசு,மறுமலர்ச்சிக் காலம், நவீன அரசுகள் போன்ற காலங்கள் குடியுரிமை பற்றிய கருத்து அபிவிருத்தியடையவும் பலமடையவும் காரணமாக அமைந்தன.ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெறுவதென்பது அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பிரஜை ஒருவருக்கு உரித்தானதைப் போலவே எந்த நாடாக இருந்தாலும் அந்நாட்டுப் பிரஜைகளுக்குரிய சிறப்புரிமைகளையும் அவ்வரசியல் அமைப்பு உள்ளடக்கி இருக்க வேண்டும்.

எனினும் நவீன குடியுரிமையானது பரந்துபட்ட அங்கத்துவத்தைக் குறிப்பிடுவதுடன் பல்வேறுபட்ட தனித்துவ அம்சங்களையும்வேறுபட்ட அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள போதும் அது முழுமையாக கிரேக்க, ரோமானிய குடியுரிமை மற்றும் மார்ஷலின் குடியுரிமையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாக இருக்கவில்லை. தற்கால நவீன குடியுரிமையைப் பொறுத்தவரை கிரேக்க மற்றும் ரோமானியக் குடியுரிமை மற்றும் மார்ஷலின் சமூகக் குடியுரிமை என்பவற்றின் பல அம்சங்களைப் பிரதிபலிக்கின்றமையை மேலுள்ள விளக்கங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## REFERENCES


1. Bryan, S.T. (ed.) (1993). *Citizenship and Social Theory*. Sage Publications

2. Heater, D. (1990). *What is Citizenship?*. UK: Polity Press.

3. Heater, D. (2004). *A Brief History of Citizenship*. NYU Press.

4. Heater, D. (2004). *Citizenship: The Civic Ideal in World History, Politics and Education.* (3rd edn). New York: Manchester University Press.

5. Djeudo, A.K. (2013). *Concepts that Shape Politics and Government in Cameroon: A Handbook of Political Theory for Stakeholders*. Author House.

6. Elspeth, G. (2004).*The Legal Elements of European Identity: EU Citizenship and Migration Law*. Netherland: Kluwer Law International.

7. Engin F Isin, Bryan S.T. (2002). *Handbook of Citizenship Studies.* SAGE Publication.

8. Engin F Isin. (2002). *Being Political: Genealogies of Citizenship.* University of Minnesota Press. http://www.dissentmagazine.org/article/t-h-marshalls-citizenship-and-social-classhttp://www.iefd.org/articles/demos.php

9. Jayapalan, N. (1999). *Aristotle*. New Delhi: Atlantic Publishers and Distributers.

10. Dwyer, P. (2010). *Understanding Social Citizenship: Themes and Perspectives for Policy and practice*. UK: The policy press, University of Bristol.

11. Euben,P., Wallach, R.R. &Ober, J. (eds.) (1994). *Athenian Political Thought and the Reconstruction of American Democracy.* Cornell University Press.

12. Herrmann, P. (ed.) (2004). *Citizenship Revisited: Threats or Opportunities of*

*Shifting Boundaries*. New York: Nova Science Publishers Inc.

13. Marshal, TH. (1950). *Citizenship and Social Class*. Cambridge University Press.

14. Faist, T. (ed.) (2007). *Dual Citizenship in Europe: From Nationhood to Societal Integration.* England: Ashgate Publishing Limited.